

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.7.2024) சென்னையில், நடிகர் சரத்குமார் மகள் வரலட்சுமி – நிகோலாய் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நடிகை திருமதி ராதிகா சரத்குமார் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (03.07.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் அரசு பணியில் 3% பணி வழங்குவது மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் புதியதாக அமைக்கப்படவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு முதன்மைச் செயலாளர்கள், காவல் துறை அதிகாரிகள், அரசு துறை செயலாளர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விக்கிரவாண்டி இடைத்தேர்தல்:

# பா.ஜ.க. கூட்டணிக்கு எந்தக் கொள்கையும் கிடையாது!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் பேச்சு....

விழுப்புரம், ஜூலை 5 -

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்ட மன்ற தொகுதிக்கு இடைத் தேர்தல் வரும் 10ஆம்தேதி நடைபெறுகிறது.

இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டி யிடுகிறார். இவருக்கு ஆதர வாக விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் தி.மு.க.வினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள் ளனர்.

இந்நிலையில் விக்கிர வாண்டி தெற்கு ஒன்றியம் நேமூர் கூட்டு சாலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யின் மாநில செயலாளர் முத்தரசன்,சிறு குறு மற் றும் தொழில் துறை அமைச் சர் தா.மோ. அன்பரசன், வணிகவரி மற்றும் பத்திர பதி துறை அமைச்சர் மூர்த்தி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ் தான் ஆகியோர் வாக்கா ளர்களை சந்தித்துஉதயசூரி யன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட் டனர்.

வாக்கு சேகரிப்பில் ஈடு பட்ட இந்திய கம்யூனிஸ்ட்



கட்சியின் மாநில செயலா ளர் முத்தரசன் பேசுகை யில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மக்கள் நலன் சார்ந்த பல் வேறு திட்டங்களை அறி வித்து செயல்படுத்தி வருகிறார்.

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம்,

கல்லூரி படிக்கும் பெண் களுக்கு புதுமைப்பெண் திட்டம் மூலம் மாதம் ஆயி ரம் ரூபாய், தமிழ் புதல் வன் திட்டத்தில் உயர் கல்வி படிக்கும் மாணவர் களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய், மகளிர் உரிமை திட்டத்தின் மூலம் பெண்க ளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உள்ளிட்ட பல் வேறு சிறப்பு வாய்ந்த பெண்கள் நலன் சார்ந்த திட்டங்களை முதலமைச் சர் செயல்படுத்தி வருகி றார்.

பிரதான கட்சி என்றும் செல்வாக்கு மிக்க கட்சி என்றும் அதிகமான கோடிக்கணக்கான உறுப் பினர்கள் கொண்ட கட்சி என்றும் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக உள்ள கட்சி என்று சொல்லும் அ.தி.மு.க.வினர் விக்கிர வாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் ஏன் போட்டி இடவில்லை என கேள்வி எழுப்பிய முத்தர சன் பா.ஜ.க. அதிமுக கள் ளக் கூட்டணி என்றும் அதை நிரூபிக்கும் வகை யில் இப்போது விக்கிர வாண்டி இடைத்தேர்த லில் இருந்து அ.தி.மு.க. விலகி உள்ளதாக குற்றம் சாட்டினார்.

தொடர்ந்து பேசிய இந் திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் முத்த ரசன், அ.தி.மு.க. கட்சியை பிளவு படுத்தியவர் மோடி என்றும் தர்மயுத்தம் செய்ய சொன்னவர் மோடி ஓ பன் னீர் செல்வத்தை அ.தி.மு.க. வுடன் இணைத்து அவ ருக்கு ஒருங்கிணைப்பாளர் துணை முதல்வர் போன்ற பொறுப்புகளை வழங்க சொன்னவர் பிரதமர் மோடி ஆக அ.தி.மு.க. கட் சியை பிளவு படுத்தி சின்னா பின்னமாக ஆக் கிக்கொண்டு இருப்பவர் பிரதமர் மோடி, பா.ஜ.க. கட்சி என்றும் விமர்சித் தார்.

தற்போது விக்கிர வாண்டி இடைத்தேர்த லில் பிஜேபியின் ஆட்சி யோடு ஒரு கட்சி நிற்கிறது.

பா.ஜ.க., பா.ம.க. கூட் டணி எலியும் தவளையு மான கூட்டணி என்றும் எந்தக் கொள்கையும் அக் கட்சிக்கு கிடையாது என் றும் சந்தர்ப்பவாத கூட் டணி என்றும் தேர்தல் வரும் சமயத்தில் தான் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கூட்டணி குறித்து பேசுவார் என கம் யூனிஸ்ட் கட்சியின் மாநில பொது செயலாளர் முத்தர சன் குற்றம் சாட்டினார்

வாக்கு சேகரிப்பின் போது பல்லாவரம் சட்ட மன்ற உறுப்பினர் கருணா நிதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் புஷ்பராஜ், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய செயலாளர் வேம்பி ரவி உள்ளிட்ட இந் தியா கூட்டணி கட்சி நிர் வாகிகள் கலந்து கொண்ட னர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டசபை தொகுதி உறுப்பினர் அலு வலகத்தில் மின்வாரியத்தில் பணிபு ரிந்து உயிரிழந்த மற்றும் காயமடைந்த மின்வாரிய ஊழியர்களின் வாரிசுக ளுக்கு கருணை அடிப்ப டையில் பணி நியமன ஆணைகளை தமிழக சுற் றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் வழங்கினார். இந்நிகழ்வுகளில் மின் வாரிய செயற்பொறியா ளர் நடராஜன், வல்லத்தி ராக்கோட்டை உதவி மின் பொறியாளர் பிரகாஷ் திமுக நகர துணைச் செயலாளர் செங்கோல், தகவல் தொழில் நுட்ப அணி வீர செல்வம், ஆசிரியர் வெங் கடேஷ், கிருஷ்ணமூர்த்தி, விஜி, கர்ணா, அரசு வழக் கறிஞர் கண்ணதாசன் உட் பட பலர் கலந்து கொண்ட னர்.



சேலம் மத்திய மாவட்டக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட விக்கிரவாண்டி தொகுதியில் காணை மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட வெங்கந்தூர். சானிமேடு, ஆரியூர். ஊராட்சிகளில். கழக வேட்பாளர் அன்னியூர் சிவா வாக்குகள் சேகரித்தார். உடன் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, கழக அமைப்பு செயலாளர். ஆர்.எஸ்.பாரதி, தலைமை நிலைய செயலாளர். பூச்சி முருகன். காங்கிரஸ் கட்சி தலைவர். செல்வப் பெருந்தகை. விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ சேலம் நாடாளுமன்ற உறுப்பினர். டி.எம். செல்வகணபதி ஆகியோர் இருந்தனர்.



திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட நந்தன் கால்வாய் பாதுகாப்பு இயக்கத்தின் நிர்வாகிகள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவிடம் நந்தன் கால்வாய் திட்டத்தினை முழுமையாக சீர் செய்தல், தென்பெண்ணை பாலாறு நதிநீர் இணைப்பு திட்டம் 1 பணியினை துவக்கவும், நந்தன் கால்வாய் முறைப்படுத்தப்பட்ட பாசன வாய்க்காலாக அறிவிக்க கோரிக்கை மனு அளித்தனர். இந்நிகழ்வின் போது சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி உடன் இருந்தார்.




இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று முன்தினம் (03.07.2024) ஆணையர் அலுவலகத்தில் 2024 ஆகஸ்ட 24 மற்றும் 25 தேதிகளில் பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டுப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மாநாட்டின் ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் தவத்திரு திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், தவத்திரு இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், சுகிசிவம், முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார், திருமதி தேசமங்கையர்க்கரசி, கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் க.சந்திரமோகன், இணை ஆணையர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ‘நிறைந்த மனம்’ என்ற தலைப்பில் அரசின் நலத்திட்டங்கள் குறித்து

# பொதுமக்களிடம் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் கேட்டறிவர்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தகவல்!

சென்னை, ஜூலை 5 -

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அரசின் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் மாதந்தோறும் கேட்டு அறிய உள்ளனர் என்று பேரவையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வினா-விடை நிகழ்வின்போது தெரிவித்தார்.

வினா - விடை நிகழ் வின் போது கேட்கப் பட்ட கேள்வியும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பதில் வரு மாறு :

**கேள்வி :** செய்தி மக்கள் தொடர்புத் துறையில் பணிபுரியும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அரசின் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் கருத்து கேட்கும் நிகழ்ச்சி ஏதும் நடத்தப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

**பதில் :** தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட் டங்களிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவ



லர்கள் பத்திரிக்கையாளர் களுடன் பொது மக்களை மாதந்தோறும் நேரில் சென்று சந்தித்து, அரசின் நலத்திட்டங்கள் மூலம் பயன் பெற்றவர்களிடம், அதன் பயன்கள் பற்றிய விவரங்கள் அறிந்து வருகி றார்கள்.

இந்நிகழ்விற்கு வரும் ஆகஸ்ட் மாதம் முதல் “நிறைந்த மனம்” என்ற தலைப்பில் நிகழ்ச்சியை நடத்த முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட் டுள்ளார்.

**பேருந்து பயண அட்டை**

நடப்பாண்டில், அங்கீ கார அட்டை (Accreditation Card) பெற்றுள்ள பத்திரி கையாளர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் தலைமை யிட பத்திரிகையாளர்கள் பயணம் செய்திட 457 எண்ணிக்கையிலும், பிற மாவட்டங்களில் சம்பந் தப்பட்ட மாவட்ட ஆட்சி யரின் பரிந்துரையின் பேரில் 2,917 எண்ணிக்கை யிலும் ஆக மொத்தம் 3,374 கட்டணமில்லாப் பேருந்து பயண அட்டை கள் வழங்கப்பட்டுள்ளன.

செய்தியாளர் அட்டை (Press Pass) பெற்றுள்ள பருவ இதழ்கள் / கால முறை இதழ்களில் பணிபு ரியும் பத்திரிகையாளர்க ளுக்கு பேருந்து பயண அட்டை வழங்குவது தொடர்பாக முதலமைச்சர் அவர்களின் மேலான கவ னத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரி வித்துள்ளார்.

### பீகாரில் ஊழல் பா.ஜ.க. ஆட்சியால்தான் பாலங்கள் இடிந்து விழுகின்றன!

பாட்னா, ஜூலை 5 -

பீகார் மாநிலத்தில் கடந்த 15 நாட்களில் 9 பாலங்கள் இடிந்து விழுந்துள்ளன. இவ் வாறு பாலங்கள் தொடர்ந்து இடிந்து விழுவது பீகாரில் பாஜக கூட்டணியில் நிதிஷ் குமார் தலைமையில் உள்ள ஆளும் ஜனதா தள கட்சி மீது விமர்சனங்களைக் கிளப் பியுள்ளது.

இந்நிலையில் பீகாரில் தொடர்ந்து பாலங்கள் இடிந்து விழுந்து வருவதை அம்மாநில எதிர்க்கட்சி தலைவர் தேஜஸ்வி யாதவ் தனது எக்ஸ் பக்கத்தில் விமர் சித்துள்ளார்.

அதில், “பா.ஜ.க கூட்ட ணியில் ஊழல் ஆட்சியில், பீகார் மாநிலத்தில், கடந்த 15 நாட்களில் 9 பாலங்களில் இடிந்து விழுந்துள்ளன. குறிப்பாக, 03.07.24 அன்று மட்டும், 3 பாலங்கள் இடிந்து விழுந்துள்ளன.